IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

M.C.O.P. No. 10/2020

Deposition of PW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **07.02.2025**.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | K.குருநாதன் | Caste | : | |
| S/o | : | கொளந்தாண்டி | Calling | : | |
| Village | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்,

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 14.11.2018 | மாதேஸ்வரன்மலை காவல்நிலைய FIR in Cr.No.69/2018(கன்னடம் to தமிழ்) | நகல் |
| ம.சா.ஆ.2 | – | எனது ஆதார் அட்டை | நகல் |
| ம.சா.ஆ.3 | – | எனது வங்கி பாஸ் புத்தகம் | நகல் |
| ம.சா.ஆ.4 | – | TN –52–B5577 பேருந்தின் இன்சூரன்ஸ் பாலிசி | நகல் |
| ம.சா.ஆ.5 | – | 2 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | நகல் |

மனுவில் கோரியவாறு உத்தரவு வழங்க வணக்கமாய் பிராத்திக்கிறேன்.

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

விபத்தில் இரண்டு பேருந்துகள் சம்மந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவற்றில் ஒன்று அரசு பேருந்து என்றும், மற்றொன்று தனியார் பேருந்து என்றும் சொன்னால் சரிதான். நான் அரசு பேருந்தில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். நான் மேற்படி அரசு பேருந்தில் பயணம் செய்தது குறித்து ஆதாரம் ஏதாவது உள்ளதா என்றால்

இல்லை. விபத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது குறித்து விபத்து பதிவேடு அல்லது காயச்சான்றிதழ் ஏதாவது நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விபத்திற்காக பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் மேற்படி விபத்தில் நான் காயமுற்றேன் என்பதை காண்பிக்க குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள விபத்தில் சம்மந்தப்பட்ட எங்கள் ஊரைச்சேர்ந்த நபர்கள் எத்தனை பேர் என்றால் 3 நபர்கள். எங்கள் ஊரைச்சேர்ந்த நபர்கள் நஷ்டஈடு கோரி மனு தாக்கல் செய்திருப்பதால் எனக்கும் நஷ்டஈடு வேண்டும் என்று தவறாக நான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நஷ்டஈடு மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அரசு பேருந்தில் பயணம் செய்தது குறித்து ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யாததால் நான் அரசு பேருந்தில் பயணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனுவை தள்ளுபடிசெய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-குருநாதன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்
சார்பு நீதிபதி,
மேட்டூர்.